# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII code of Criminal Procedure)

-------

## IN THE COURT ASSISTANT SESSIONS JUDGE, HOSUR.

**SC.No. 76/2022**

**CNR.No.**

Sessions Case

Deposition of witness for Prosecution **PW 2** LW 4

Name : Kumaresan

Father's Name : Chinnathambi

Village : Chettipalli

Taluk :

Caste :

calling :

Religion :

Age : 48

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.01.2023

**முதல் விசாரணை:-**

நான் சூளகிரி டாஸ்மாக் எண்.3034 ல் விற்பனையாளராக பணிபுரிந்து வருகிறேன். அந்த கடையில் நான் ஒரு விற்பனையாளர். என்னுடன் வெங்கடராஜ் என்ற மற்றொரு விற்பனையாளர் மற்றும் சூப்பர்வைசர் சேகர் மற்றும் உதவியாளர் அம்பேத் ஆகியோர் பணிபுரிந்து வருகிறோம்.

கடந்த 09.08.2015 அன்றைய தினம் எனக்கு சிறிது உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. அதன் காரணமாக இரவு 9 மணிக்கு உடல்நிலை மிகவும் மோசமானதால் மருத்துவரை பார்ப்பதற்காக நான் கிளம்பினேன், என்னுடன் என்னை அழைத்து செல்வதற்காக சேகரும், அம்பேத்தும் உடன் கிளம்பினார்கள். வெங்கடராஜ் மட்டும் நாங்கள் கடையில் விட்டு விட்டு கிளம்பினோம்.

Scanned with OKEN Scanner

அன்றைய தினம் 10 மணிக்கு வேலை முடித்து அவர் கிளம்பிய பிறகு இரவு சுமார் 10.15 மணிக்கு வெங்கட்ராஜ், சூப்பர்வைசர் சேகருக்கு போன் செய்தார். அப்போது சேகருடன் நானும் உடன் இருந்தேன். அப்போது அவர் தொலைபேசியில் தான் வேலை முடித்து விட்டு சாப்பிடுவதற்காக சூளகிரிக்கு சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது ஓசூரில் இருந்து கிருஷ்ணகிரி செல்லும் சர்வீஸ் சாலையில் மேம்பாலத்தின் வளைவிற்கு அருகே சர்வீஸ் ரோடு அருகே சென்று கொண்டிருந்த போது அப்பாச்சி என்ற இரு சக்கர வாகனத்தில் வந்த மூன்று பேரில் நடுவில் உட்கார்ந்திருந்த ஆள் தன்னுடைய தலையின் பின்புறம் தன் கையினால் அடித்ததாகவும், அதன் காரணமாக தான் நிலை தடுமாறி கீழே விழுந்ததாகவும், அப்போது பின்னால் அமர்ந்திருந்த நபர் கத்தியால் தன்னுடைய வண்டியில் கட்டியிருந்த பணப்பையை அறுத்ததாகவும், கத்தியை பார்த்தவுடன் தான் பயந்து அங்கிருந்து ஓடிவந்ததாகவும் கூறினார்.

அதன் பிறகு நாங்கள் எங்கள் மேல் அதிகாரியிடம் விற்பனையாளரிடம் இருந்த பணம் கொள்ளை போனதாக போன் மூலம் தகவல் தெரிவித்தோம். அடுத்த நாள் காலை 10 மணிக்கு அதிகாரிகள் எங்கள் கடைக்கு வந்து ஸ்டாக்குகளை கணக்கு பார்த்து எவ்வளவு பணம் கொள்ளை போனது என்று கணக்கு எடுத்தார்கள். அவ்வாறு கணக்கு எடுத்த போது ரூ.1,65,000/- க்கு 20 ரூபாய் கம்மியாக இருந்தது. அந்த தொகை ரூ.1,64,980/- ஆகும். அந்த தொகையை குறிப்பிட்டு காவல் நிலையத்தில் விற்பனையாளர் வெங்கட்ராஜ் புகார் கொடுத்தார். புகார் கொடுக்க போன போது அவருடன் சூப்பர்வைசர் சேகரும் சென்றார். அதன் பிறகு போலீசார் எங்களை விசாரித்து எழுதிக் கொண்டார்கள்.

வெங்கட்ராஜ் சம்பவத்தன்று இரவு தொலைபேசியில் போன் செய்த போது சூப்பர்வைசர் கொள்ளையடித்த நபர்களின் அங்க அடையாளங்களை பற்றி அவரிடம் விசாரித்தார். அதற்கு வெங்கட்ராஜ் அந்த நபர்களுக்கு சுமார் 25 லிருந்து 30 வயதிற்குள் இருக்கும் என்று கூறினார். இரண்டு நபர்கள் குண்டாக இருந்ததாகவும், ஒல்லியாக இருந்த நபர் நடுவில் அமர்ந்திருந்ததாகவும் கூறினார். போலீசார் இந்த சம்பவம் தொடர்பாக என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

சம்பவத்திற்கு முன்பு நான் எத்தனை வருடங்கள் வரை டாஸ்மாக் கடையில் வேலை செய்து வருகிறேன் என்றால் 2003 லிருந்து சம்பவம் நடந்த 2015 வரை 12 வருடங்கள் வேலை பார்த்து வந்தேன்.

Scanned with OKEN Scanner

நானும், விற்பனையாளர் , புகார் கொடுத்த வெங்கட்ராஜ் ம் விற்பனையாளராக என்றால் ஆமாம்.

சம்பவம் நடந்த டாஸ்மாக் கடையில் மொத்தம் எத்தனை விற்பனையாளர்கள் என்றால் என்னுடன் சேர்த்து 2 விற்பனையாளர்கள்.

அந்த கடையில் சூப்பர்வைசர் அல்லது மேற்பார்வையாளர் போன்ற மேல் அதிகாரி எத்தனை பேர் வேலை பார்க்கின்றனர் என்றால் ஒருவர் தான், அவர் சேகர்.

மேற்படி கடையில் மொத்தம் எத்தனை பேர் வேலை பார்த்தனர் என்றால் அனைவரும் சேர்ந்து 4 பேர் வேலை பார்த்தோம்.

அந்த கடையில் மொத்தம் எத்தனை கவுண்டர் இருக்கிறது என்றால் ஒரு கவுண்டர் தான்.

அந்த கடையில் நான் விற்பனை வேலை பார்த்தேனா, வெங்கட்ராஜ் விற்பனை வேலை பார்த்தாரா என்றால், நாங்கள் இருவரும் வேலை பார்த்தோம்.

பொதுவாக பில் போடும் வேலையை யார் பார்ப்போம், மது விற்கும் வேலையை யார் பார்ப்போம் என்றால் இருவரும் அந்த இரு வேலைகளையும் பார்ப்போம்.

சம்பவத்தன்று யார் பில் போடும் வேலையை பார்த்தார்கள் என்றால் அன்றைய தினம் விற்பனை வேலையையும், பில் போடும் வேலையையும் வெங்கட்ராஜீ வே பார்த்தார்

எங்களுடைய கடையில் பாதுகாப்பு பெட்டகம் உள்ளது என்றாலும், வசூலாகும் தொகையை அந்த பாதுகாப்பு பெட்டகத்தில் தான் வைக்க வேண்டும் என்றால் எங்களுக்கு அது போன்ற உத்தரவு இல்லை.

கடையில் வசூலாகும் தொகையை மேலதிகாரியின் உத்தரவு இல்லாமல் ஒரு ரூபாய் கூட கடையை விட்டு எடுத்து செல்லக் கூடாது என்றால் அது போல் உத்தரவு எதுவும் இல்லை.

ஒவ்வொரு நாளும் வசூலாகும் தொகையை கணக்கு பார்த்து லெட்ஜரில் குறிப்பிட்டு அதன் கீழே கணக்கு முடித்து கையொப்பம் இட வேண்டும் என்றால் அன்றைய தினமே செய்ய வேண்டிய அவசியம் இல்லை, மறுநாள் காலை தான் அதை செய்வோம்.

முதல் நாள் வசூலாகும் தொகையை மறுநாள் வங்கியில் செலுத்த வேண்டும் என்று சொன்னால், முதல் நாள் இரவு வரை வசூலாகும் தொகையை மறு நாள் வங்கி மூடுவதற்குள், அதாவது 4 மணிக்குள் கட்ட வேண்டும்.

சம்பவத்தன்று எனக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறுகிறேன், அதற்காக எந்த மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்தேன் என்றால் உள்நோயாளியாக எங்கும் சிகிச்சை எடுக்கவில்லை, கிருஷ்ணகிரி கோவிந்தராஜ் என்ற தனியார் மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுக் கொண்டேன். அப்போது என்னுடன் மற்ற இருவரும்

வந்தார்களா என்றால் ஆமாம்.

எனக்கு சிகிச்சை முடிவதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் இரவு 10.30 மணி ஆகிவிட்டது.

சிகிச்சை முடித்த பிறகு மருத்துவமனையில் இருந்து நாங்கள் மூவரும் தனி தனியாக சென்று விட்டோமா, அல்லது அவர்கள் இருவரும் என்னை வீட்டில் விட்டு விட்டு சென்றார்களா என்றால் அவர்கள் இருவரும் என்னை என் வீட்டில் விட்டு சென்றார்கள். என் வீடு எங்கு உள்ளது என்றால் செட்டிப்பள்ளியில் உள்ளது. கிருஷ்ணகிரியில் இருந்து செட்டிப்பள்ளி எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் சுமார் 15 நிமிடம் தூரத்தில் உள்ளது. கிருஷ்ணகிரியில் இருந்து செட்டிப்பள்ளி போய் வருவதற்கு சுமார் 1/2 மணி நேரம் ஆகுமா என்றால் ஆகும்.

மறு நாள் எங்கள் கடையில் கணக்கு பார்த்து எவ்வளவு தொகை வந்தது என்பது எந்த அதிகாரியின் முன்னிலையில் நடந்தது என்றால் மாவட்ட அதிகாரியின் முன்னிலையில் நடந்தது. அவர் பெயர் என்னவென்றால் அப்போது யார் இருந்தார்கள் என்று தற்போது எனக்கு நினைவு இல்லை.

காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்ற போது 20ரூபாய் குறைவாக ரூ.1,65,000/- வசூலானது என்று கணக்கு காண்பிப்பதற்கான பதிவேடுகளையும் எடுத்துச் சென்றார்களா, அப்போது நானும் உடன் சென்றேனா என்றால் நான் போகவில்லை, வெங்கட்ராஜ் மட்டும் தான் போனார். அந்த பதிவேடுகளையும், நகல்களையும் எடுத்துச் சென்றாரா என்றால் ஆமாம்.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து காவல் நிலையம் செல்வதற்கு 5 நிமிடம் ஆகுமா என்றால் இல்லை, சுமார் 15 லிருந்து 20 நிமிடம் ஆகும். அந்த இடத்தில் இருந்து காவல் நிலையம் எவ்வளவு தொலைவில் இருக்கிறது என்றால் சுமார் 1 கி.மீ தூரத்தில் இருக்கும். அதற்கு அவ்வளவு நேரம் ஆகுமா என்றால் காவல் நிலையத்திற்கு சம்பவ இடத்தில் இருந்து சுத்தி தான் போக முடியும், டிராபிக் ல் போவதற்கு அவ்வளவு நேரம் பிடிக்கும்.

சம்பவ இடத்தில் இருந்து மலை அடிவாரத்தில் கோட்டை வழியாக நடந்து சென்றால் கூட காவல் நிலையத்திற்கு 5 நிமிடத்திற்குள் சென்று விடலாம் என்றால் எனக்கு அந்த வழி தெரியாது. இரவு நேரம் என்பதால் அந்த இடத்தில் டிராபிக் இருக்காது என்று சொன்னால் சரியல்ல.

இந்த வழக்கு சம்பவம் எந்த இடத்தில் எவ்வாறு நடந்தது என்ற விவரம் வெங்கட்ராஜ் சொல்லி தான் எனக்குத் தெரியும் என்றால் சரிதான்.

வெங்கட்ராஜ் தான் கையாடல் செய்து பணத்தை எடுத்ததை மறைப்பதற்காக கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிக்கும் மேற்படி சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

கடையில் வசூலான தொகையை மேலதிகாரிகளின் உத்தரவு இல்லாமல் கடைக்கு வெளியே எடுத்து செல்வதற்கு அனுமதி இல்லை என்றாலும், ஆனால் அவ்வாறு மேலதிகாரியின் உத்தரவு தேவை இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and super-intendence, and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Assistant Sessions Judge